

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில், நேற்று முன்தினம், உடல்நலக் குறைவால் மறைவெய்திய தமிழறிஞரும் கவிஞருமான பெருங்கவிகோ வா.மு.சேதுராமன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (5.7.2025) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ரத்னா லோகேஸ்வரன், மு.ராசா, லோகு ஆகியோர் உடனிருந்தனர்.

### இரா.வினோத் தலைமை! அய்யப்பாக்கம் துரை வீரமணி முன்னிலை! எஸ்.பி.முரளிகிருஷ்ணன் வரவேற்புரை!

# வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

### டி.ஆர்.பாலு - மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி - ஈகை தனசேகர் - க.ஹேமநாதன் சிறப்புரை!

சென்னை, ஜூலை 6 - சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பொதுக்கூட்டம் இன்று (06.07.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு, வானகரம், ஓடமாநகர், கன்னியம்மன் கோயில் அருகில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா. வினோத் தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். பி.முரளிகிருஷ் ணன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி, என். ஜெயச்சந்திரன், என்.ரவி, பா.கிரிஜா, ஏ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், கு.சதீஷ்குமார், கே.எஸ்.மாறன்குமார், கா.சங்கர், இ.தேவராஜ், இ.சீனிவாசன், எம்.ஜி.சாமிநாதன், மா.பாலகிருஷ்ணன், கே.முரளிகிருஷ்ணன், க.வரதன், ஆர்.பூங்கோதை ராஜன், ஜெ.ஜெயசுதா, எஸ்.ஷர்மிளா, ஏ.எம். பர்மன், கு.செந்தில்குமார், எஸ்.நவீன் குமார் மற்றும் பலர் முன்னிலை வகுக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, தலைமை கழக பேச்சாளர் ஈகை தனசேகர், இளம் பேச்சாளர் க.ஹேமநாதன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாக ராஜா எம்.எல்.ஏ, சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பி.டி.பாண்டிச்செல்வம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் என்.தனசேகரன், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நோளம்பூர் வே.ராஜன், எஸ்.பத்மபிரியா, எஸ்.பி.அருள், எஸ்.சங்கர் கணேஷ், எஸ்.தினகரன் எஸ்.ஷாகிலா, பா.சிவசங்கர் மற்றும் அயப்பாக்கம் கிளைக் கழகச் செயலாளர்கள், அடையாளம்பட்டு இந்நாள் முன்னாள் கழக நிர்வாகிகள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வானகரம் ஊராட்சி முன்னாள் இந்நாள் கிளைக் கழகச் செயலாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே.கே.செந்தில்குமார், எம். சபரி ராஜா, பி.மனிஷ், எஸ். ஜனார்த்தனம் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### திருவொற்றியூர் கிழக்குப் பகுதி

# 7வது வட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணி!

### தி.மு.தனியரசு எம்.சி. – எஸ்.மோகன் தலைமை! த.கார்த்திகேயன் முன்னிலை!

சென்னை, ஜூலை 6- சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி, திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன், திரு வொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் மாநகராட்சி மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு ஆகியோரின் தலைமையில் வட்ட கழக செயலாளர் த.கார்த்திகேயன் முன்னிலையில் நேற்று (5.7 .2025 - சனிக்கிழமையன்று) காலை, ஓரணியில் தமிழ்நாடு என்ற இயக்கத்தை வலுப்படுத்த, சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 7வது வார்டு சௌந்தரபாண்டியன் தெரு, பக்தவச்சலம் தெரு, திருவள்ளூர் தெரு, நேதாஜி தெரு, பாகம் எண் 158ல், பாக முகவர் BLA2 பாலகிருஷ்ணன், BDA மணிகண்டன் ஆகியோரை அழைத்துக் கொண்டு, உறுப்பினர் சேர்க்கை பணி நடைபெற்றது.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன்,

பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார், ஆர்.குமரேசன், என்.சுந்தரமூர்த்தி, எம்.கோமலவள்ளி, எஸ். ஆர்.மலைராஜ், டி.பி.பால சுந்தரம், சாரதி, பாலாஜி, நவாஸ் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி கம்மாபுரம் மேற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் முதனை ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் சி.வி. கணேசன் பொதுமக்களிடம் எடுத்துரைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் கோட்டேரி, பழனி, சுரேஷ், நெய்வேலி ஜி தண்டபாணி ஆகியோர் உள்ளனர்




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தெற்கு ஒன்றியம் தி.மு.க. இளைஞரணி சார்பில் எஸ் அக்ரஹாரம் கிராமத்தில் தெருமுனை கூட்டம் ஒன்றிய செயலாளர் கே. ராஜேந்திரன், ஏற்பாட்டில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம. கிரண், முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. கலந்துகொண்டு திராவிட மாடல் ஆட்சி நான்காண்டு சாதனை குறித்து சிறப்புரையாற்றினார். உடன் தலைமை கழக பேச்சாளர் அப்துல் ரகுமான்பாரி கே. சிரஞ்சீவி, முனுசாமி, பாலகிருஷ்ணன், ரேணுகுமார்,வ.கணேசன், ரவி, காளிதாஸ், ஜெகதீஷ், பிரபுராஜ், விஜய், திலீப், ஹரி, சேகர், பிச்சாண்டி, பழனி, ஜி. சந்திரசேகர்,உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### முதியோர் இல்லங்கள் -

# பணிபுரியும் பெண்கள் விடுதிகளை பதிவு செய்ய எளிய வழிகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 6- தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் விடுதிகள் மற்றும் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றை பதிவு செய்வதற்கான நடைமுறைகள் மறுசீரமைக்கப்பட்டு எளிய ஆளுமையின் கீழ் இந்த செயல்முறையை எளிதாக்குவதற்காக தமிழ்நாடு இ-சேவை இணைய முகப்பில் ஒரு பிரத்யேக சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ-சேவை இணைய முகப்பின் (https://www.tnesevai.tn.gov.in/) மூலம் பின்வரும் சேவைகள் தற்போது இணைய வழியில் வெளியிடப்பட்டுள்ளன.

முதியோர் இல்லங்களைப் பதிவு செய்தல்.

பெண்களுக்கான இல்லங்கள் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல்.

பணிபுரியும் மகளிர் விடுதிக்கான உரிமம் வழங்குதல்.

சமூக நலத்துறையின் கீழ் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், தங்களுடைய உரிமங்கள் காலாவதியாகும் போது புதிய இணையதள நடைமுறையைப் பயன்படுத்தி தங்கள் உரிமத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

உரிமம் பெற்ற அனைத்து நிறுவனங்களும் கீழ்க்காணும் நடைமுறையை பின்பற்ற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

https://www.tnesevai.tn.gov.in/ என்ற இணையதளத்தில் தமிழ்நாடு இ-சேவை இணைய முகப்பை பார்வையிட வேண்டும்.

தங்கள் பதிவுகளை புதுப்பிக்க வேண்டும்.

தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

'உரிமங்கள் மற்றும் பதிவுகள் தேவைப்படும் விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பிக்கும் வசதியினை பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

### திருவள்ளூர் மாவட்டம்

# காக்களூர் ஏரி - தாமரைக்குளம் ரூ. 2. 32 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்

திருவள்ளூர் ஜீலை 06: திருவள்ளூர் மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி துறை சார்பாக காக்களூர் ஊராட்சியில் காக்களூர் ஏரி மற்றும் தாமரைக்குளத்தினை நமக்கு நாமே திட்டத்தின் (NNT 202526) கீழ் மேம்படுத்துதல் பணிகள் துவக்க விழா நடைபெற்றது இதில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தங்கினார் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முன்னிலை வகித்தார்

ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ் ஆகியோர் வரவேற்றார்கள்

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்புரை யாற்றினார் அப்போது அமைச்சர் பேசுவையில்

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.04.2025 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் நடைப்பெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், காக்களூர் ஊராட்சியில் காக்களூர் ஏரி மற்றும் தாமரைக்குளம் மேம்படுத்தும் பணிகள் 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் "நமக்கு நாமே திட்டம் (NNT)" திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்" என அறிவித்துள்ளார்கள்.

காக்களூர் ஏரியானது காக்களூர் ஊராட்சி 21 குக்கிராமங்களும், 12.15 சதுர கி.மீ. பரப்பும் 30000-க்கும் அதிகமான மக்கள் தொகையும் அதிக அளவிலான தொழிற்சாலை களும் நிரம்பியுள்ள ஊராட்சியாகும். மேற்படி ஊராட்சியில் உள்ள காக்களூர் ஏரி காக்களூர் ஊராட்சி மற்றும், திருவள்ளூர் நகராட்சியை இணைக்கும் பகுதியில் அமைந்துள்ளது. காக்களூர் ஏரியை சுற்றி சுமார் 2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் அமைந்துள்ள காக்களூர் ஏரியானது திருவள்ளூர் நகரத்திற்கு மத்தியில் உள்ள மிகப் பெரிய ஏரியாகும்.

மேலும், இந்த ஏரியினை மேம்படுத்தி நடைபாதை, மின் விளக்குகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தி தர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை அளித்தனர்.

தாமரைக்குளம், காக்களூர் ஊராட்சியில் ஊராட்சி மன்றத்திற்கு அருகாமையில் சுமார் 4.85 ஹெக்டேர் பரப்பளவில் தாமரைக்குளம் அமைந்துள்ளது. இக்குளத்திற்கு அருகாமையில் கலைஞர் நூலகம், அரசு அலுவலகங்கள், விளையாட்டு கூடம், பூங்கா, அரசு தொடக்க மற்றும் மேல்நிலை பள்ளிகள் ஆகியவை அமைந்துள்ளதால், பள்ளியில் பயிலும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த குளத்தை சீரமைத்து தருவதனால் பயனுள்ளதாக அமையும் என கோரிக்கைகள் விடுத்தனர். மேலும், இந்த தாமரைக்குளத்திற்கு அருகில் அமைந்துள்ள பூங்காவினை ஊர்பகுதியில் வசிக்கக்கூடிய மாணவர்களும், இளைஞர்களும் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர். பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிப்பினை தொடர்ந்து, காக்களூர் ஊராட்சியில் காக்களூர் ஏரி மற்றும் தாமரைக்குளம் மேம்படுத்துதல் பணி துவக்கி வைத்ததில் மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது என தெரிவித்தார்

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், செயற்பொறியாளர் வி.ராஜவேல், செயற்பொறியாளர் பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வகுமார், மெல்கிராஜா சிங், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், பூவை ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வி. ஜெ.உமாமகேஸ்வரன், வி.தியாகராஜன், எஸ்.சௌந்தரராஜன், ஒன்றிய நிர்வாகிகள் கே.சொக்கலிங்கம், டி.தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம், சீனிவாசன், ராமச்சந்திரன், பரமேஸ்வரன், டி.டி.தயாளன் உள் பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் கலந்து கொண்டனர்.



### தன் மொத்த வாழ்க்கையை

# முத்தமிழுக்கே காணிக்கையாக்கிய மாணிக்கத் தமிழர் வா.மு.சேதுராமன்!

## கவிப்பேரரசு வைரமுத்து இரங்கல்!

**மீசைத் தமிழர் என்று**
**ஆசைத் தமிழர்களால் அழைக்கப்பட்ட**
**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**
**மறைந்துவிட்டார் என்ற செய்தியால்**
**நெஞ்சம் ஒருகணம்**
**நின்று துடித்தது**

**தன் மொத்த வாழ்க்கையை**
**முத்தமிழுக்கே காணிக்கையாக்கிய**
**மாணிக்கத் தமிழர் வா.மு.சேதுராமன்**

**எண்ணம் சொல் செயல் யாவிலும்**
**தனித்தமிழையே தாங்கிப்பிடித்தவர்**

**தமிழுக்காக**
**நடைப்பயணம் சென்று சென்று**
**கால்கள் தேய்ந்தாலும்**
**கொள்கை தேயாத கோமான்**

**அவரது தமிழ்ப்பணி இதழ்**
**என் தொடக்ககாலக்**
**கவிதைகளை வெளியிட்டு**
**வெளிச்சம் தந்தது என்பதை**
**நான் நன்றியோடு**
**நினைத்துப் பார்க்கிறேன்**

**வளையாத முதுகெலும்பும்**
**நிலையான கொள்கையும்**
**சலியாத உழைப்பும்**
**சரியாத தமிழ்ப் பற்றும்கொண்ட**
**பாவேந்தர் மரபின்**
**நல்லதொரு பெருங்கவிஞன்**
**நம்மைவிட்டு நீங்கிவிட்டார் என்று**
**பாரதிதாசன் கவிதா மண்டலமே**
**கண்ணீர் வடிக்கும்**

**தமிழூட்டி வளர்த்த**
**அவர் பிள்ளைகளுக்கு**
**என் ஆழ்ந்த இரங்கல்**

**ஒரு**
**வெற்றிடம் உண்டாகிவிட்டது**
**வா.மு.சேதுராமனின்**
**தோற்றத்திற்கும் ஏற்றத்திற்கும்**
**ஈடு கொடுக்கும்**
**இன்னொரு கவிஞன்**
**இங்கு இல்லை**

**போய்வாரும் கவிஞரே!**
**எங்களோடு**
**உங்கள் தமிழ் இருக்கும்**



**- கவிப்பேரரசு வைரமுத்து**

### சைதை மேற்குப் பகுதி

# 139 அ வட்ட பாக முகவர்கள் - தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் சை.மு.சேகர் – லோகேஷ் ராஜரத்தினம் பங்கேற்பு

சென்னை, ஜூலை 6 - சைதை மேற்கு பகுதி 139 அ வட்டத்திற்குட்பட்ட பாக முகவர்கள் பாக தகவல் தொழில் நுட்ப ஆலோசனைக் கூட்டம்.04- 07- .2025. வெள்ளிக்கிழமை. மாலை 6.30 மணியளவில், வேணுகோபால் தெருவில் வட்டப் பொருளாளர். பூபதி. வெங்கடேசன் இல்ல மாடியில் வட்ட அவைத்தலைவர். இ.வரதன் தலைமையில் எம். எஸ்.ஹரிபாபு, டி. என். சிவமணி, பி.எஸ். பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன் முன்னிலையில் சைதை மேற்கு பகுதி தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர். லோகேஷ் ராஜரத்தினம், வட்டச்செயலாளர். சை.மு.சேகர் ஆகியோர் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கும் பணியில் எப்படி ஈடுபடுவது குறித்து ஆலோசனை வழங்கி பேசினர் . அன்றே அப்பணியை துவக்கிடவும் செய்தனர்.

இக்கூட்டத்தில் B.L.A.2, வட்ட தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர் யமஹா ராஜேஷ், பி. எஸ். பிரகாஷ், எஸ்.முருகன், ஆர். கண்ணன், என். தீனதயாளன், ஜி. ஏழுமலை, என்.ரமேஷ், ஜோ. அந்தோணி, டி.கோபால கிருஷ்ணன், கே.விஜய குமார், கொடி.து.சுரேஷ் பாபு, பூபதி.வெங்கடேசன், ப.எழிலரசன், சார்ப். சரவணன்,

இ.வ.ரகுபதி, தகவல் தொழில் நுட்பம். எஸ். பிரவீன், எம். ஆகாஷ், அ.ஜாகீர் உசேன், லோகேஷ், எம். பிரசாத், க. இளங்கோ, எஸ்.முத்து, கே.விஜய், வி.பொன்ராஜ், மூ.கௌதம், எஸ். வினேஷ், எஸ்.ஜீவா, எஸ். ஜெகன் மற்றும் எம்.சதீஷ், ஜெ.விஜயகுமார், வி. வாசுதேவன், கா.மூர்த்தி, ப.சிவகுமார் மற்றும் பலர் பங்கேற்றனர்